FM

முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

7 - ஆம் வகுப்பு

தமிழ்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 X 1 = 5

1. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ..... .

அ) முண்டந்துறை ஆ) வேடந்தாங்கல்

இ) கோடியக்கரை ஈ) கூந்தன்குளம்

2. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ..... .

அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி

3. வானில் ..... கூட்டம் திரண்டால் மழை பொழியும்.

அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்

4. தமிழின் கிளை மொழிகளுள் ஒன்று ..... .

அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்

5. பேச்சு மொழியை ..... வழக்கு என்றும் கூறுவர்.

அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி

II கோடிட்ட இடங்களை நிரப்புக. 5 X 1 =

1. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .....

2. யானைக் கூட்டத்திற்கு ஒரு ..... யானைதான் தலைமை தாங்கும்.

3. சொல்லின் முதலில் மட்டுமே இடம்பெறுவது ..... குறுக்கம்.

4. மழலை பேசும் ..... அழகு.

5. நீதிமன்றத்தில் தொடுப்பது ..... .

III பொருத்துக.

4 X 1 = 4

1.	நச்சரவம்	-	நோன்பு
2.	கிளைமொழி	-	மிகுந்த சுவை
3.	விரதம்	-	விடமுள்ள பாம்பு
4.	அதிமதுரம்	-	தெலுங்கு

IV எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5 X 2 = 10

1. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.
2. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாக கவிஞர் கூறுவன யாவை?
3. மொழியின் இரு வடிவங்கள் யாவை?
4. வட்டாரமொழி எனப்படுவது யாது?
5. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?
6. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?
7. காடு - வரையறுக்க.

V எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 X 3 = 9

1. `எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
3. காடுகளை அழிப்பதனால் ஏற்படும் விளைவுகளை எழுதுக.
4. ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

VI எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 X 2 = 6

1. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. குற்றியலுகரத்தின் வகைகள் யாவை?
3. மகரக் குறுக்கத்திற்கு இரண்டு எ.கா. தருக.
4. குற்றியலிகரம் என்றால் என்ன?

VII அடிபிறழாமல் எழுதுக.

1. `அருள்நெறி' எனத்தொடங்கி `இசைந்திடும் அன்பறமே' என முடியும் எங்கள் தமிழ் பாடலை எழுதுக. 4
2. வாய்மை எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக. 2

VIII கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. 5

1. முன்னுரை - மொழிபற்றிய விளக்கம் - தாய்மொழிப்பற்றுக் கொண்ட சான்றோர் - சாதுவன் வரலாறு - நமது கடமை - முடிவுரை. *(அல்லது)*

நீங்கள் சென்றுவந்த சுற்றுலா குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.